**செய்தி வெளியீடு எண்: 914** **நாள்: 13.12.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 12.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், பெரம்பலூர் மாவட்ட புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்க வளாகம் மற்றும் விருதுநகர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 4 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 2 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள் மின்னணு நூலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், பெரம்பலூர் மாவட்ட புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்க வளாகத்தில் 2 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 1 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள், பார்வையாளர் இருக்கைகள், மரத்தாலான தரைத்தளம், ஒளிமின் விளக்கு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் – மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக நூலக வளாகத்தில், சுமார் 1206 சதுர அடி பரப்பளவில், ஒரே சமயத்தில் 50 பேர்கள் அமர்ந்து கணினி மூலமாக மின்னணு தகவல்களை படித்திடும் வகையில், 2 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இணைய தள வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள மின்னணு நூலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பா. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் த. ராதாகிருஷ்ணன் மற்றும் சிண்டிகேட் துணை குழு உறுப்பினர் திரு.ஆர். சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**